




ஓலை 126| ஓசை 249| ஜூன் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



'பாவலரேறு' பெருஞ்சித்திரனார்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து**

## பொருள்

**உழவுத் தொழிலைச் செய்ய முடியாமல் பிற தொழிலைச் செய்யச் செல்வோர் எல்லாரையும், உழவர்களே தாங்குவதால் அவர்களே இந்த உலகத்தவர்க்கு அச்சாணி ஆவர்.**

**அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய**

**9597887847**

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.**

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## தீராக் கோபம் போராய் முடியும்!

பாவகை : ஒயிற் கும்மி




புன்னகை தன்னைச் சுமக்கா முகமும்
புயலைச் சுமந்த கடலாகும்.
புரிந்துசினம் விரிந்துமது - பகையால்
கரிந்தநிலை கவிழுமது - என்றே
மின்னல்போல் கண்களுமே மின்னும் நிலைகொண்டு
தன்னில் சினமடக்கப் போரடங்கும்!

கன்னல் சுமந்தச் சுவையாய் நெஞ்சில்
கனலாய்ச் சினத்தைச் சுமக்காதே!
கன்னம் பழம்பழுக்கும் - எண்ணம்
தின்னச் சினம்கசக்கும் - போராய்
உன்னில் வடிவெடுக்கும் இன்பம் மறைந்துவிடும்;
உற்றுமே நோக்கச் சினமகலும்!

கருவைச் சுமந்த முகிலும் மழையாய்க்
கனிதல் போன்ற மனம்வேண்டும்;
கட்டுக் கடங்கா சினமடங்கா - நிலையால்
பட்டுப் போகும் பகையடங்கா- என்றே
திருவாய் இருந்தே திருந்தி சினத்தை
உருக்கியே வாழ்தல் கடனாகும்!




சினத்தினால் எத்தனை நாடும் அழிந்து
சிதைந்தே போன கதையுண்டு;
சிறுமையைத் தந்திடுமே - சீர்மை
வறுமையைத் தந்திடுமே - உணர்ந்தே
அனலாய்ச் சினத்தையும் அள்ளித் தெளித்தால்
அறமும் வளரா தடுத்திடுமே!

### இலக்கணக் குறிப்பு:

இரண்டாவது அடியின் முதல் நான்கு சீர் முடுகி வருவதே ஒயிற் கும்மியாகும். அந்த முடுகியலடி முதலடியின் மோனையைப் பெற்று வரும். அந்த முடுகியலின் மோனையாக, அடுத்த அரையடியின் முதற் சீர் வரும். முடுகு சீர்களில் வெண்பா தளைக்கான வெண்டளை வருதல் வேண்டும் என்பதில்லை. மேலே உள்ள இறுதி பாட்டில் முடுகியலின் முதற் சீர், முதலடியின் முதற் சீரின் மோனை (சி- சி) வந்துள்ளன. காண்க. ஈற்றுச் சீர் காய்ச்சீரும் அருகி வரும். எதுகை எடுப்பும் வரலாம். "சிறுமை" "வறுமை" என்பது போல.

பாவகை : பஃறொடை வெண்பா

எண்ணத்தின் ஊற்றோ
எழுத்தாய் உருமாற்றம்.
அண்ணத்தில் நாவுடன்
அண்பல் உரசலில்
தண்மை ஒலியாக்கித்
தன்மையாய்ப் பேசிடக்
கண்ணயங் கொண்டே
களித்தே உழைப்பரே.
தண்டமிழ் தன்னைத்
தனித்துவமாய்ப் பேசியே
பண்ணிசை தன்னிலும்
பாந்தமாய் ஓசையெழக்
கண்கவர் ஆட்டமும்
காண்போரை ஈர்க்கவே
வண்ணம் மிகுத்தே
வளமையும் பெற்றிட
எண்திசை எங்கும்
எழுந்தருளும் ஆதியை
மண்டியே போற்றி மகிழ்.



கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

# ஹைக்கூக் கவிதைகள்

1.
பனியன் முழுவதும் கிழிசல்
நூல் மூட்டைச் சுமக்கும்
தொழிலாளி!

2.
காய்ந்து போன செடி
நல்ல மழை
கை நிறைய கனிகள்



கவிஞர் இரா. மதிராஜ், அலப்பட்சாக் கவுண்டன் புதூர்

ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுகளில் ஈடுபட்டனர் எனக் கருதப்படும் சில அரசியல்வாதிகளும், அரச அதிகாரிகளும் தற்போது வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனராம்.

கடந்த காலங்களில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட நபர்கள் கைது செய்யப்பட்டு வரும் நிலையிலேயே இவர்கள் இவ்வாறு விகாரைகள் மற்றும் கோயில்களுக்குச் சென்று வழிபடுகின்றனராம். கோவில்களிலும் விஹாரைகளிலும் விசேட வழிபாடுகளாம். கடவுளின் தீர்ப்பு எப்படி இருக்குமோ?

பெறுமதியான பூஜைத்தட்டு
கடவுள் முன் வைக்கிறார்
ஊழல் அரசியல்வாதி



கவிஞர் சோ. ஸ்ரீதரன், இலங்கை

# வெண்பட்டு முகிலே



வெண்பட்டு முகிலே
பொன்மழை பொழிவாயே

வெண்காந்தள் மலரே
வெட்கமேனோ உனக்கு
வெண்ணிலவாய் உலவியே
வெளிச்சம் தருகிறாயே

வெட்டுக்கிளியாய் மனதை
வெட்டித்தான் செல்கிறாயே
வெண்டைக்காய் விரல்களால்
வெற்றிலைசுருட்டி தருகிறாயே

வெள்ளந்தியான என்னையும்
வெள்ளைவிழியால் ஈர்க்கிறாயே
வெண்தாமரை போலவே
வெள்ளத்தில் சிக்கினேனே

வெண்பஞ்சாய் பறந்தே
விண்ணில் மிதக்கிறேனே
மங்கையுன் பார்வையிலே
மனதையும் இழந்தேனே

வெண்புறா சிறகுகள்
வெண்சாமரம் வீசுதே
வெண்மேகம் ஒளிர்ந்திட
வெளிச்சம் பரவுதே

வெண்பட்டு முகிலே
பொன்மழை பொழிவாயே
வெள்ளாம்பல் பூவே
வெண்பொன்னாய் மிளர்கிறாயே

வெண்ணெல் சிரிப்பால்
வெகுளியாய் ஆனேனே
வெட்டும் விழிகளால்
அம்பொன்று வீசுகிறாயே

இதயம் கவர்ந்தவளே
இனிமையும் சேர்ந்ததே
இதமான அரவணைப்பில்
இன்பமும் கூடியதே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# வாழ்க்கைப் பாடம்

அனைவரையும்
அரவணைக்க
கற்றுத்தந்தாள் "அம்மா".

பழகலின்
பண்பை
போதித்தார் "அப்பா".

நல்லொழுக்கம்
நாகரிகம்
எடுத்துரைத்தார் "ஆசான்".

அன்பையும்
ஆசையையும்
ஆழப்பதியமிட்டது "காதல்".

இதுதான்
வாழ்வென
நல்வழியமைத்தது "நட்பு".



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# நடிப்பு கலைந்தால் கசங்கும் மனமே



எப்படித்தான் இப்படியெல்லாம்
சொல்லமுடிந்தது என்ற கேள்வியையே
மனம் கேட்ட வண்ணமிருக்கிறது.

ஆம் ஆக மனதினுள்
இப்படியெல்லாம் எண்ணியபடி
போலியாய் நாடகநடமாட்டம்
கொண்டிருக்க வேண்டும்
இத்தனை நாட்களுமென்று தான்
மனம் சொல்கிறது.

இல்லையா பின்ன
இத்தனை நாட்களும்
நல்லதாய் புரிந்தவராய்
பேசிக்கொண்டிருந்தவர்
திடிரென பழிச்சொல்
சாடி இருக்க வேண்டாமே.

பழிச்சொல்லை சுமந்துக்கொண்ட
மனதோடு தானே பேசிக்கொண்ட
நாட்களை நகர்த்திருக்க வேண்டும்

அதனாலே தானே சுமக்க முடியாமல்
வீசிவிட்டார்கள்
வார்த்தைகளாக திரட்டி.

மின்னலோடு பின் வரும் இடியாய்
கடிக்கிறது நெஞ்சோரம் பெறும் வலி.

இறந்தே விட்டேன்
மறந்தே விடமாட்டேன்
என்றும்.

உறுதிகள் நெஞ்சினுள் தினமும்
மனமும் கசந்து சுருங்கி
வலியை தருகிறது.

நேசப்பிழையில்
வேசம் களைந்தது விட்டதில்
மகிழ்வு கொள் மனமே
தேற்றவேண்டும் நானே.

கவிஞர் ஷஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (புத்தளம்)

# வானம் தொட்டுவிடும் தூரம்தான்



உழைப்பெனும் காலில் நீ ஊன்றி நடந்தால்
வானம் தொட்டுவிடும் தூரம்தான் !
அறிவெனும் அணையாவிளக்கு ஏந்திச் சென்றால்
வானம் தொட்டுவிடும் தூரம்தான் !

ஒழுக்கமெனும் உயிருடல் ஓம்பி வளர்த்தால்
வானம் தொட்டுவிடும் தூரம்தான் !
அன்பெனும் இறையூற்று இதயம் நிறைத்தால்
வானம் தொட்டுவிடும் தூரம்தான் !

முயற்சியெனும் தொடர் ஏணி பற்றிக் கொண்டால்
வானம் தொட்டுவிடும் தூரம்தான் !
நம்பிக்கை எனும் அச்சாணி நீங்கிடா பயணம் கொள்ளின்
வானம் தொட்டுவிடும் தூரம்தான் !

கண்மூடி தானே வரும்கனவை காண்பவருக்கு இல்லை;
கண் திறந்து தனக்கான கனவை தானே உருவாக்குபவர்க்கு
வானம் தொட்டுவிடும் தூரம்தான் !

அச்சம் என்ற கல்லறையில் உறங்குபவர்க்கு இல்லை;
துணிவு எனும் உளி கொண்டு தன்னைச் செதுக்கியவர்க்கு
வானம் தொட்டுவிடும் தூரம்தான் !

தோல்வி நெருப்பில் சாம்பலானவர்க்கு இல்லை;
தோல்வி நெருப்பில் கசடு நீங்கி செம்பொன் ஆனவர்க்கு
வானம் தொட்டுவிடும் தூரம்தான் !

அமெரிக்க ஜனாதிபதி அபிரகாம் லிங்கன்
ஒரு செருப்புத் தொழிலாளி மகன்;
நினைவில் கொள்வீர்;

அக்கினிச் சிறகுகள் முளைத்த அப்துல்கலாம்
இராமநாதபுர கடல்மேல் ஓர் படகுக்காரர் மகன்;
நினைவில் கொள்வீர் !

தகுதி வளர்த்திக் கொள்ளின்
அக்கினிசசிறகுகள் தானே முளைக்கும்;
ஆகாயமும் குனிந்து உன்னைத் தொடும் !

கவிஞர் ஆ. சீ. கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

# அறமில்லா கல்வி பாழ்

தீந்தமிழ் தீண்டா உதடுகள் பாழ்
தமிழ் வெறுப்பு உமிழும் தெவ்வர்
அற்றுப்போக செந்தழல் சூழும்.

அறமில்லா கல்வி பாழ்
அக நெருக்கமில்லா இல்
அவ்வியம் சூழ கேடும்.
திறனில்லா கொற்றம்
தீராப் பகை தரும்.



கவிஞர் செ. தமிழ் நேயன், தமிழ் நாடு

# பள்ளி திறந்தது

(தன்முனை கவிதைச் சரம்)

புதிய வகுப்பு
புதிய ஆசிரியர்
புதிய சிந்தனை
புதிய முயற்சி

சுணங்காமல் கல்
கணிதப் பாடமதை
வருந்தாமல் கல்
வணிக பாடமதை

இயற்பியல் கற்றுத் தேறு
சற்றே கடினம்தான்
பொறியியல் சேர்க்கைக்கு
இதுவே உதவும்

கருத்தூன்றி கல்
ரசாயன
பாடத்தை.
வேறு எதுவும் வேண்டாம்
உன் மதிப்பெண் ஏற்ற

விலங்கியலும் தாவரயியலும்
இரு கண்கள்
அவசியம் வேண்டும்
மருத்துவ கல்வி பயில

பூகோளம் படிக்க
பூமியின் அறிவு சிறக்கும்
சரித்திரம் படிக்க
சகம் புரியும்

தாய் மொழி தமிழன்றி
எதுவும் புரியாது உனக்கு
ஆங்கிலம் இன்றி
எதுவும் நடக்காது உனக்கு

பள்ளிக் கல்வியை
கவனத்துடன் படி
மேலும் படிக்க
அடித்தளம் ஆகும்

ஒழுக்கம் போற்றி
விருப்புடன் கல்
பழுதின்றி முன்னேற
அதுவே வழி.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன், பெங்களூரு

# சீவக சிந்தாமணி (முப்பது ஒன்று)

8. விமலையார் இலம்பகம்.
மாமன் இல்லத்திற்கு தாயை அனுப்பினான்
தாமதம் இன்றி இராசமாபுரம் சென்றான்
சாமக்கோழி கூவ இரவில் புறப்பட்டான்
காமரூபத்தில் யாருக்கும் சீவகனைத் தெரியலை
(காமரூபன் : விரும்பியபடி மேற்கொள்ளும் ஒரு வடிவம்)

காற்றைப் போல் வேகமாகச் சென்றான்
ஆற்றைக் கடந்து ஏமாங்கதத்தைச் சேர்ந்தான்
நேற்றைய பொழுது தாயின் நினைவுகள்
சற்றும் பாராமல் கண்களில் நீர்

பந்து விளையாடும் பாவையைக் கண்டான்
சிந்து ராகத்தை முணுமுணுத்து ஆடினாள்
பந்தை மேலே எறிந்து பிடிக்கலானாள்
வந்தது விரல்பட்டு கீழே விழுந்தது

அவன் அவள் அழகில் மயங்கினான்
அவள் மார்பு குலுங்க கலங்கினான்
இவள் தேவலோக திலோத்தமையோ
இவளின் அசைவுகள் திக்கு முக்காடினான்

பந்தை எடுத்து அவளிடம் தந்தான்
அந்த நான்கு கண்களில் மின்னல்
"பூவுண்ட கண்ணாள் புருவச்சிலை கோலி செய்ய
வேவுண்ட நெஞ்சிற் கிடுபுண் மருந் தென்கோ லென்னா"(1965)
(பூப்போல கண்ணாள் புருவ வில்லை வளைத்தாள்
பாய்ந்த அம்பினால் மனப்புண், புண்ணுக்கு மருந்து ஏது?)

பக்கத்தில் இருந்த கடையில் தங்கினான்
வெட்கத்தில் முகம் சிவந்தாள் அவள்
அக்கடை அவள் தந்தையின் கடை
திக்கற்ற கடையில் திடீர் கும்பல்
(அவள் தந்தை : சாகரதத்தன்.)

சற்று நேரத்தில் பரபர வியாபாரம்
விற்றுத் தீர்ந்தன அத்தனைப் பொருட்களும்
சுற்றிலும் கடைகள் காலியாக இருக்க
முற்றிலும் நடந்தது அபார விற்பனை


கடையில் தங்கிய சீவகனைக் கண்டான்
விடை தெரிந்தது வியாபாரத் தந்திரம்
"தடை ஏதும் கூறாமல் வாருங்கள்"
கலைஞனை இல்லம் அழைத்துச் சென்றான்

கமலையிடம் சீவகனை அறிமுகம் செய்தான்
விமலைக்கு ஏற்ற துணைவன் இவரே
சமமாக அமர்ந்து விருந்து அருந்தினான்
விமலையின் சாதகம் அன்றே குறித்தது.
( கமலை : மனைவி, விமலை : மகள்)

அமர்வான் மருமான் நின் கடையில்
அமர்ந்ததும் பொருள்கள் விற்றுத் தீரும்
அமர்ந்தவனே விமலைக்குச் சிறந்த வரன்
பிறகென்ன திருமணம் நடந்து முடிந்தது

விண்ணும் விழைய இன்பம் நுகர்ந்தனர்
மண்ணும் மழையும் போல் குழைந்தனர்
கண்மணி விமலை வருந்தப் பிரிந்தான்
துணைவியை விட்டான் கடமை உணர்ந்தான்
(விமலையார் இலம்பகம் முற்றிற்று)

தொடரும்...



கவிஞர் ந. திருக்கோமு

உன்னிடத்தில் நான் பேச
துடிக்கும் உன்னத மனம்
கொண்டவள் நான்.
கண்ணின் ஓரத்தில் வழியும்
கண்ணீரை துடைக்க வந்த
கள்ளம்கபடம் அற்றவள் நான்.
இருட்டினிலே நிலவின் துணையாக
நிழலை பின் தொடர வந்தவள் நான்.
மனதை லேசாக மறக்க முடியாத
அதிசயத்தை கொடுத்தவள் நான்.
துன்பத்தை அகற்றி இன்பத்தை பெறுக
வைக்க வந்த பச்சிளம் குழந்தை நான்.
கற்பனை கதைகளை நினைவாக்க
வந்த நிரந்தரம் நானே.



கவிஞர் மோனீஷா

# அவள் சொல்ல மறந்தால்

தினம் தினம் அவள் ஞாபக தொல்லை
ஒருநாள் கேட்டுக் கொண்டேன் என்னவளே
காதல் என்னும் மாயக் கோப்பையில் உன் மனம்
என்ன சொல்லிக் கொண்டிருக்கிறது என் மனம்
உன் வருகையின் விடையை எதிர்பார்த்து தினம் தினம்
மீள முடியாத உணர்வுகளில் என் உள்ளம்
உன்னை வரைந்து கொண்டே இருக்கிறது
உன்னை முழுமையாக வரைந்து விடுவேனா என்ற
ஆக்கத்தில் நான் ஆனால் நீ
என்ன சொல்லப் போகிறாய்
உன் ஓவியம் முழுமையடையாமல்
உன் பதிலுக்காக நான்.



கவிஞர் ம. செல்லமுத்து, நூத்தப்பூர்

# பெற்றோர்



உணர்வாலே காதலித்து உள்ளத்திலே ஊற்றெடுத்து
உயிர் தந்து உருக் கொடுத்து உருவாக்கிய ஈருயிர்கள்
ஈரைந்து மாதங்கள் கருவிலே சுமந்து
உணர்வாலே அசைவெல்லாம் தொட்டணைத்து
வலி கொண்டு உதிரம் சிந்தி மறு ஜென்மம் கண்டு
இனிதாய் ஈன்றெடுத்து மூச்சடைக்கி முத்தம் இட்டு
மார் மேலே சீராட்டி தோள் மேலே சீர்தூக்கி
நாம் காணாதவை எல்லாம் கான் என களிக்க விட்டு
கலியிலும் களி கொண்டு ரசித்த இரு உயிர்கள்
தன் சுகம் அறியாது நம் சுகமே மகிழ்வெனக் கொண்டு
வேதனைகள் பல வந்த போதும் சோதனைகள் சூழ்ந்த போதும்
சோர்விலா மனம் கொண்டு சொர்க்கத்தில் மிதக்க வைத்தீர்
கண்ணருகே உருவம் கொண்ட கடவுளாய் கலந்திட்டீர்
கை தூக்கி கட்டி அணைத்து கரம் கொடுத்து கரம் பிடிக்க
மனம் கொண்ட மாதிரியே வாழ்க்கை அமைத்து
தந்து விட்ட பிறகு அனைத்தையும் பெற்றவுடன் பெற்றவரை மறக்கின்றோம்
உற்ற கடவுள் அவர்கள் மறப்பதை மறுத்திடுவோம்
பாராட்டி சீராட்டி சோறூட்டி போராடி வளர்த்திட்ட ஒளி விளக்குகள்
வலிகொண்டு மகிழ்வுடன் பெற்றெடுத்த தாயவளை
மாரோடு நீ சாய்த்து மகிழ்விக்க வேண்டும்
தோள் மேலே சீர்தூக்கி உலகை காண வைத்த தந்தையவனை
உலகமென நாம் போற்றி நித்தமும் வணங்கிட வேண்டும்
வயதான போதும் வளமாக எம்மை காத்தவரை
வயதாகும் நிலையில் கூட வளமாக பார்த்திட வேண்டும்
போராடி போராடி தம் வாழ்வை அர்ப்பணித்த தெய்வங்கள்
அவர்களின் போராட்டம் நிறைவுற்று முற்றுப்பெறும் போது
பொறுமை இழந்து பார்த்திட மறுக்கின்றோம்
உயிர் தந்தவளை உயிராக உருக் கொடுத்தவனை உணர்வாக
உதிரம் கொடுத்து காத்திட வேண்டும்
உலகப் புகழ் எல்லாம் கொடுத்து ஓய்வு பெற்று உறங்குகையில்
உன் மடி கொடுத்திடு வேறென்ன வேண்டும் தெய்வங்களுக்கு
மாய உலகில் மர்மமாய் மறையும் வரை
மாரோடு அணைத்திடு தாயாய் மாறி

கவிஞர் சஜிரேக்கா சுதாகரன், திருகோணமலை (இலங்கை)



வேரோடி நீர்தேடி
அலைகின்ற பொழுது.
வெய்யோனின் வெம்சூடு
சுடும்போது அழுது.
ஊரோடி உனைத்தேடி
உறவாட வந்தேன்!
உயர்காதல் உயிர்சுமந்து
உனக்கெனவே தந்தேன்!
***

மழைமஞ்சு விஞ்சுவதாய்
மடைதிறந்து நின்றாய்!
மடை திறந்த வெள்ளமதில்
நின்றோமே ஒன்றாய்!
படைகூட்டி வந்துபின்
ஏனழிக்க நினைத்தாய்!
எடைபோட்டு என்னைநீ
ஏனொழிக்க முனைந்தாய்!
***

மண்ணுக்கு மண்ணீர்போல்
மன்னவன் நீ என்றாய்!
மன்னவன் என்னைப்பின்
மணக்கவேன் மறந்தாய்!
உன்னைக் காதலிக்க
ஒருவருமே இனியில்லை!
என்னைக் காதலிக்க
உனக்கினி உரிமையில்லை!
***

போலிக்காய் உறவாடவா
பல்லைக்காட்டிக் கவர்ந்தாய்!
பலிக்காது உன்வன்மம்
பாவையே உணர்வாய்!
வலிக்காமல் வாழ்வில்லை
வஞ்சியே அறிவாய்!
பலிக்கல்ல காதல்
பெண்ணேநீ புரிவாய்!
***

மண்ணீரைத் தேடும்வேர்
மடியாது ஒருபோதும்!
கண்ணீரும் மண்ணீராக்கிக்
காவியம் படைக்கும்!
பெண்ணுன்னைப் பிரிப்பதோ
பிரித்தல் கணக்காகும்!
பிரிவுக்குள்ளும் புரிதல்தரும்
கூட்டல் கணக்காகும்!

கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், (சரவணமுத்து நவேந்திரன்) கிழக்கிலங்கை

# வாழ்க்கை

வாழ்க்கையின் தத்துவம் வாழ்வின் சிறப்பே
ஊழ்வினை நம்மை ஊன்றி சுற்றிடுமே
பிறப்பு முதலாய் பிஞ்சு உள்ளமும்
சிறப்பின் உறவை பஞ்சாய் தேடுதே



சேர்க்கையின் சொந்தம் சேர்ந்தே வந்திடும்
பார்வையில் எளிய பாசமும் தெரியுமே
தேவையும் நிறைந்த தேடுதல் உயர்வே
சேவையும் ஓடியே சேர்ந்தே வந்திடும்

பள்ளியின் நிகழ்வும் பலரது நினைவாமே
துள்ளியே விளையாடும் துணிவான பருவமே
கல்லூரி படிப்பில் கவனம் தேவையே
எல்லோரும் மகிழவே ஏட்டை முடிக்கணும்

பணமும் பொருளும் பகைமை வாழ்வாமே
குணமாய் சிறந்தால் குற்றமும் களையுமே
பணத்தால் வெல்லலாம் பண்படா இதயத்தை
குணமது உயர்வே குன்றின்மேல் விளக்காய்

தூக்கத்தை காண தூளியைத் தேடுதே
ஏக்கத்தைக் கூட்டி ஏளனம் பேசுதே
வறுமை வாழ்வ வளமை ஊற்றே
சிறுமை எண்ணி சிந்தை சோராதே

வெற்றியின் சின்னம் வென்றிடும் காலத்தை
கற்றிடும் மாண்பில் கணக்கின்றி சிறப்போம்
பெற்றிடும் பேறுகள் இனிதே கிடைத்தே
உற்றோர் துணையும் உறவில் ஓங்குமே

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# கடுகு மனம்

பேருந்து இரைச்சலிலும்
பேரிரைச்சலாய் தன்
பேசியில் கதைத்திடும்
பெண்ணின் பேச்சு
விரும்பிடினும் செவியில்
விழுந்தது தானாக.



அவளகம் விளையாடவந்த
அடுத்த வீட்டுப் பிள்ளையை
அனுமதியாதே என்று பேசியில்
அவளிட்டக் கட்டளையில்
அதிரந்தது என்மனம்.
அதுவே வழக்கமாகுமென
அவளிட்ட விஷ வித்தில்
ஆடித்தான் போனேன்.

அடுத்த தலைமுறைக்கு
அன்பைப் பகிராது மன
அகலத்தை விதைக்கலாமோ?
அனுசரனையும், பகிர்தலும்
அறவே அறியாது
அறம் வளர்த்த மண்ணில்
அடம் வளர்த்தலாகுமோ?

ஒன்றி வாழாது என்றும்
ஒதுங்கி வாழ்ந்திட
ஒன்றும் சாதித்திடலாகுமோ?
அடுக்கடுக்காய் வீடுகள்
ஆகாயம் முட்டும் வளர்ந்தும்
அன்பு கடுகாய், காரமாக சிறுத்ததோ?

கவிஞர் ஷீலாதேவி அருணாசலம், நாகர்கோயில்

# குடும்பம் ஒரு கதம்பம்



குடும்பம் ஒரு கதம்பம்
குடும்பத்தின் ஒற்றுமையே
ஒரு நாட்டின் ஒற்றுமை ஆகுமே!

ஒரு ஆணும் பெண்ணும் இணைந்து
திருமணம் என்ற மணிமண்டபத்தை
நிர்மாணிக்கிறார்கள்; வாரிசுகள் வளர்ந்து
அவரவர்களுடைய கல்வியையும்
வேலை திறமையும் மேற்கொள்கிறார்கள்.

ஒவ்வொருவரும் பல எண்ணத்தையே
கொண்டிருக்கிறார்கள்
கதம்ப மலர் வாசனையைப் போல,
வாசமாக இருந்தால் நேசமாக கொண்டாடலாமே!

மணிவண்டபத்தின் முத்துக்கள் ஒவ்வொன்றாக
உதிரும் அபாயமும் அங்கே ஏற்படும் போல் இருக்கிறதே !
பெற்றோர்களும் கவலையை வெளிப்படுத்த முடியாமல் போக
எங்கிருந்தோ வந்தாள் உறவுக்கார பெண்ணாக பத்மாவதி.
இவர்களைப் பற்றிய அனைத்து விஷயங்களையும் கேட்டறிந்தவள்
ஒரு ஞாயிற்றுக்கிழமையை தேர்ந்தெடுத்தாள்.

அனைவரையும் மொட்டை மாடிக்கு வரவழைத்தவள்,
அவரவர்களுடைய பிரச்சினைகளை பேசி பேசியே
தீர்ப்புகளையும் அவர் அவர்களுக்கு ஏற்றவாறு
பதிலையும் அளித்தாள்.

யார் வீட்டில் பிரச்சனை இல்லை!
பேசி தீர்த்துக் கொண்டால்
இமாலய பிரச்சனையும் தீர்ந்து தான் போகுமே!
அது ஒரு மாலை , அதுவும் தேநீர் வேளை.
அவரவர்களுக்கு உரிய கருத்துக்களை
மனம் விட்டு பேசி தீர்த்துக் கொண்டனரே!

மணி ஏழு ஆனதே அன்றைய பௌர்ணமி
இவர்களின் சந்தோஷ சிரிப்பில்
தானும் மகிழ்ந்து மேலும் பிரகாசமானதே!

கவிஞர் அ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# முடியவே முடியாது

ஒன்று இல்லாவிட்டால்
இன்னொன்று

ஒன்று தொலைந்தால்
பதிலுக்கு ஒன்று

ஒன்றை அலட்சியப்படுத்தி
மேலும் ஒன்று

ஒன்றை மறந்து
அதை மிகைப்படுத்த
இன்னும் ஒன்று

ஒன்றை இழந்து
இழப்பீட்டை நிவர்த்திக்க
மற்றைய ஒன்று




அனைத்திலும்
இடைவெளிகள் நிரப்பப்படலாம்
அனைத்திலும்
இல்லாமைகள் ஒழிக்கப்படலாம்

ஆயினும்
பழைய ஒன்றாக
புதியது ஆகாது
ஆகவும் முடியாது!

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# உழைத்து உழைத்து உயர்த்திய உயிர்

உழைப்பில் அப்பா உன்னதம் ஆனவர்
உலகம் காண உண்மையைப் பார்த்தவர்
கண்ணில் வலிகளோடு காயத்தை கண்டவர்
கண்ணியமாக வாழ்ந்து கரைச் சேர்த்தவர்
அல்லும் பகலும் அயராது உழைத்தவர்
அதிகாலை எழுந்தாலும் அதிசயம் கண்டதுயொன்று
ஆர்ப்பரிப்பு இல்லாமல் ஆகாயத்தையும் காட்டியவர்
ஆலயத்திற்கு சென்றாலும் ஆழமாய் பதிந்தவர்
குடும்ப சுமைகளை குதுகலமாய் சுமப்பவர்
குழனிலும் ஏழிசையை குவலாயம் ஆக்கியவர்
உன்னத மனிதனை உயர்ந்த இடத்தில்
உலகமே பார்த்து உயிராய் நிற்க
எண்ணிய எண்ணத்தை எப்போதும் காத்து
எங்களுக்கு உபதேசமாய் உறவாடிக் கொண்டு
நெஞ்சில் நீங்காத நெனப்போடு என்றும்
நெஞ்சுக்குள்ளே சுமந்து வாழ்பவரே அப்பா



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

அதிகாலை சூரியனே
அன்பான மாயவனே

வளர்பிறை திங்களில்
ஆலிலை வயிற்றில்

அரும்பிய சுடரே
அருந்தமிழ் மொட்டே!

காந்திச் சிரிக்கும்
கரிசல் பூமியில்

தவழ்ந்து விளையாட
தவமாய் உதித்து

தரணி போற்றும்
நாயகன் நீயென

என்னகம் சொல்லுதடா
என்னாசை மொழியே!

துரத்திய துன்பத்தை
தோலுரித்துத் துறத்த

செக்கர் வானத்தின்
அழகோடு பிறந்து

என்குலம் காக்கும்
ஆதியந்தம் நீதானே!



கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# கனவொன்று நானே கண்டேன்

கனவொன்று நானே கண்டேன் அன்று
நனவாக வேண்டும் இன்றே நன்று
திருக்குறளைப் பின்பற்றி என்றும் நடக்கவே
அருமையாய் வாழ்க்கைப் பயணத்தை கடக்கவே
அனைவரும் சமமாய் உயர வேண்டும்
அகிலமே வியந்து போற்ற வேண்டும்
தன்னைப் போன்றே உயர்வாய் நினைப்போம்
உன்னைப் பெற்ற அன்னையும் மகிழ்வாள்
இனியவே என்றும் பேசிடல் நன்றாம்
கனியின் பயனாய் நுகர்ந்து வெல்வோம்
பெரியோரை என்றும் துணையாகக் கொண்டு
அரிய செயல்களைச் செய்து மகிழ்வோம்
செய்யாமல் செய்த உதவியை மறவாதீர்
செய்த உதவியை என்றும் நினையாதீர்
அகர முதல எழுத்தின் தொடக்கம்
பகர்ந்து படிப்பைத் தொடங்குதல் அடக்கம்.



கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# வறுமையின் நிறம் சிவப்பு

வறுமையின் ஆடையில்
இல்லாமையின் வியர்வை துளிகள்
கிழிசல்களாய்

பசியின் கொடுமை
தொலைக்க வறுமையின்
போராட்டம் தினந்தோறும்

வறியவர்களின் வாசலில்
வசதியின் வாய்ப்புகள்
தயக்கமாய்

ஆனாலும் ஏழ்மையின்
கடின உழைப்பு
பலநேரங்களில் உற்சாகமாய்

வறுமையின் முகமூடியில்
வாழ்க்கையின் மூச்சுத்திணறல்
அதிகமாய்



ஏழைகள் என்னும் சமூகம்
ஏணிகளை தொலைத்து
ஏக்கங்களின் அடையாளமாய்
என்றும்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# பாவேந்தர் பாரதிதாசன் குறுங்கவிகள்



மகளிரின் கல்வி
மாண்புகள் கூட்டும்
குடும்ப விளக்கு ஒளிரும்

அறியாமை போகட்டும்
இருண்ட வீடுகள் ஒளிரட்டும்
கல்வியைக் கடைப்பிடிப்போம்

சரித்திரம் பேசட்டும்
நாளைய நம் வாழ்வை
பாண்டியன் பரிசென.

நட்பே துணை
நடப்பவை நலமாகும்
பிசிராந்தையார் வழிகாட்டுவார்

பசுமையில் உலகம்
பாதை காட்டும் இயற்கை
அழகின் சிரிப்பு அவசியம்.

கண்ணகி காட்டுகிறார்
பண்பாட்டின் அவசியம்
பாரதிதாசன் பாட்டில்.

குயிலை நடத்தி
மொழியைக் காத்திட்டது
பாவேந்தன் எண்ணங்கள்

மொழியின் பற்று
மூச்செனக் கலந்திட
பிரசவிக்கிறது பாவேந்தன் பாக்கள்.

இளைஞரை எழுப்புகிறது
மூடத்தனத்தைத் துரத்திட
பாரதிதாசனின் புரட்சி

இனவாதம் போக்கிட
திணிப்பென எதுவுமற்று
திசைகாட்டுகிறது பாவேந்தன் பாட்டு.

தமிழச்சியின் கத்தி
அறுத்தெரிகிறது
மூடநம்பிக்கையின் வேரை.

பாண்டியன் பரிசென எழுதினார்
பாண்டிச்சேரியின் புதல்வன்
தமிழுக்கு கிரீடம் சூட்ட.

புரட்சிக் கவி பட்டமல்ல
புதுமையைக் காத்திடும் மொழி
ஈந்திட்ட கல்வியின் பெருமை.

மூவேந்தரும் தமிழில்தான்
முத்தமிழும் இசை மழைதான்
பாரதிதாசனின் பாட்டில்.

இனமானம் ஊட்டியவரிடம்
தன்மானம் கூட்டியது
தமிழுக்கான தலைவாசல்.

**கவிஞர் இளையவன் சிவா**

# தகையணங்குறுத்தல்

## அதிகாரம் : 109

இவள் தேவதையோ
இல்லை அழகுமயிலோ.
அல்ல மானிடப்பதுமையோ
எனப்புரியாது நெஞ்சம்மயங்குதே.

நோக்கும் இவள்பார்வை
தாக்கிவருத்தும் தேவமங்கையுடையதே.
அஃதொரு சேனைகொண்டு
உயிர்தாக்கினாற் போன்றதே.

இயமன் என்பதறியாதிருந்தும்
அஃதறிந்தகணம் நிஜமென்பது.
அழகியொருத்தியின் போர்செய்யும்
கண்களுடைய வீச்சாம்.

கண்டோரின் உயிருண்ணும்
தோற்றங்கொண்ட பாவைக்கு.
கண்களின் தன்மைகள்
ஒன்றோடொன்று மாறுபட்டனவே.



தகையணங்குறுத்தல்

இளமங்கையின் பார்வை
கொல்லுங்கூற்றமோ? பிறளுங்கண்ணோ?
மருளும்பேதையோ? இம்மூன்றுமே
சேர்த்தன்மைகொண்டதுவோ? அறியோமே.

வளைபுருவங்கள் கோணாது
நேர்நின்று எதிர்க்குமெனில்.
அவைகடந்து அக்கண்கள்
நடுங்கத் துன்புறுத்தாதே.

மங்கையின் சாயாகொங்கைகள்மேல்
அவளணிந்த ஆடையின்தோற்றம்.
ஆண்யானைமேல் அணிவித்த
முகபடாம் போன்றதாமே.

போர்க்களத்தில் படைநடுங்கச்செய்யும்
வலிமையெல்லாம் மடந்தையிவளின்.
ஒளிகொண்ட நெற்றியிடம்
தோற்று அழிந்துபோனதுவே.

பொன்மானின் இளம்பார்வையும்
நாணமும் கொண்டவளுக்கு.
தொடர்பில்லா அணிகள்பூட்டி
அழுகுபடுத்தலும் வேணுமோ?!

உண்டபோது மகிழ்வுண்டாக்கும்
கள்ளது காமத்தைப்போல்.
கண்டபோதே மகிழ்வுண்டாக்கும்
ஆற்றல் கொண்டதல்லவே!

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# அவளும் நானும் ஆலமரத்து ஊஞ்சலும்

உலகமே நீயென
கடலலையாய் ஆரவாரங்கள்.
ஆலமரத்து ஊஞ்சலில்
அசைந்தாடும் வேளையில்.

தென்றலும் சுகந்தமாய்
ஊடுருவப் பாக்குதே.
இழைந்தோடும் இயற்கையின்
இன்னிசையும் இயம்புதே
இருவரும் தழுவியதையே.

மல்லிகைப் பூவின் பனியின்
வெண்மை என்னவோ சொல்ல.
மணத்தின் திரளில்
மனமும் நாமும் மயங்கியே.

அன்போடு இதயங்கள்
ஆங்காரமாய் கூத்தாட.
இன்னும் இறுக்கமாய் இழைந்தோம்
மண்ணில் மழைநீராய்.

செண்பகத் தோட்டத்து
லீலி மலரே.
செங்காந்தள் முகமும்
செவ்வான வெட்கம் கொள்ளுதே.

இடம் மாறிப்போன டமாரங்களாய்
இதயநாள ஒலிகளோ..
பரவசம் பரலோகத்திலிருந்தே
தேடி வந்ததோ?

விடியாமற் போகட்டுமே
விலகாதே
பொன்னூஞ்சலில் சங்கமித்திருப்போமே.



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# கயம் கண் அடைக்காதே



சிறப்பாம் ஓவியத்திற்கும் துவக்கம் சிறு புள்ளியே;
நீண்ட பயணத்திற்கும் துவக்கம் முதல் காலடியே!
ஆறா அவலத்திற்கும் துவக்கம் சின்னத் தவறே;
தீராப் பகைக்கும் துவக்கம் சுடுசொல்லே!

சீர்மிகு கண்டுபிடிப்பிற்கு ஊற்றுக்கண்ணாவது நுண்ணறிவு ;
திரண்ட செல்வத்திற்கு ஊற்றுக்கண்ணாவது சேமிப்பு!
இசை ஞானத்திறகு ஊற்றுக் கண்ணாவது தாளக் கணக்கு;
அரசியல் வெற்றிக்கு ஊற்றுக்கண்ணாவது இராஜ தந்திரம்!

வீரச் செயலுக்கு ஊற்றுக்கண்ணாவது துணிந்த மனம்;
கயமைப் பண்புக்கு ஊற்றுக்கண்ணாவது பொறாமை குணம்!
அறச் செயலுக்கு ஊற்றுக் கண்ணாவது மனிதநேயம்;
பாலியல் கொடுமைக்கு ஊற்றுக் கண்ணாவது காமக் குரூரம்!

குமுகாய மாறுதலுக்கு ஊற்றுக்கண்ணாவது தீயன எதிர்ப்பு;
சான்றான்மைக்கு ஊற்றுக்கண்ணாவது ஒழுக்கநெறி!
இளமை நெஞ்சிற்கு ஊற்றுக் கண்ணாவது இன்ப உணர்வு;
இல்லற செழிப்பிற்கு ஊற்றுக்கண்ணாவது விட்டுக் கொடுத்தல்!

அரிய சாதனைக்கு ஊற்றுக்கண்ணாவது தளரா முயற்சி;
புதியன கற்றலுக்கு ஊற்றுக் கண்ணாவது குன்றா விழைவு!
வெற்றியில் நிலைத்திட ஊற்றுக்கண்ணாவது நாளும் மேம்படல்;
தோல்வியை மாற்றிட ஊற்றுக்கண்ணாவது நம்பிக்கை!

முதுமைத் தளர்ச்சிக்கு ஊற்றுக் கண்ணாவது சோம்பல் உணர்வு;
பசுமை மனத்திற்கு ஊற்றுக்கண்ணாவது சுறுசுறுப்பு எண்ணம்!
ஊற்றுக் கண் அடைத்திட்டால் குளமெல்லாம் வற்றும்;
உள்ள உணர்வு அடைத்திட்டால் கற்பனைத்திறன் வற்றும் !

நன்னெறி ஊற்றுக்கண்ணை என்றும் அடைத்திடாதே;
தீநெறி ஊற்றுக்கண்ணை என்றும் திறந்திடாதே!

கவிஞர் ஆ. சீ. கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

# எத்தனை பெயர்கள் எனக்கு?



வெவ்வேறு பெயர்கள் எனக்குண்டு
அப்பா சூட்டிய அன்பு அதிலில்லை
அம்மா சூட்டிய கொஞ்சல் அதிலில்லை
அத்தை சூட்டிய உரிமை அதிலில்லை

அவையெல்லாம் காகித அம்புகள்
முதுகைத் துளைக்க முடியாமல் முனையிழந்தவை
முகத்தை தாக்கியிருந்தால் கணக்கிலிருக்கும்
முதுகை தாக்கியதால் கணக்கிலில்லை

பின்னிருந்து எனை முன் செலுத்தும்
பொறாமைத்தீ சட்டையை சுடும்
எறிந்தவரின் ஆற்றாமையில் நெய்தது அது
வன்மங்களால் கட்டப்பட்ட அம்பு அது

துன்புறுவதை இரசிக்கும் குரோதம் அது
அழுகியவைகளை சுமக்கும் ஆற்றாமை
பாவம் சுடுவதை கையிலிருத்த முடியுமா?
முள் மீது படுத்திருக்க கூடுமோ?

நினைத்துப் பார்த்தால் நம்மீது எவ்வளவு அக்கறை?
நம்மீது எவ்வளவு கண்காணிப்பு
நம் செயலுக்கு எவ்வளவு உள்ளர்த்தம்
உன்மத்தம் பிடித்த மனதுக்குள் எவ்வளவு வன்மம்?

மற்றொரு ஜீவன் மீது கவனமா?
வெறுமை வந்து என்னை தாக்கும்
எதிராளி இல்லாத ஆட்டம் தான் எவ்வளவு கொடுமை?
விமர்சனம் இல்லா வாழ்க்கைதான் எத்தனை வெறுமை?

இப்போதெல்லாம் என் பிரார்த்தனையில் அவர்களும்
கூடவே வருகிறது நாய்க்குட்டி
அவ்வப்போது பிஸ்கட் துண்டுகள்
அவ்வப்போது ஒரு கருணை பார்வை

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

# தனிமை

தனிமை நிலம் மாதிரி
நிலம் போல
பொறுமையா பார்த்து ரசிக்கணும்

தனிமை நீர் மாதிரி
நீரின் ஓட்டம் போல
ஓடிக் கொண்டே  இருக்கணும்



தனிமை நெருப்பு மாதிரி
மனதின் அழுக்குகளை
தியான அக்னியால் எரிக்கணும்

தனிமை காற்று மாதிரி
காற்றை உணர்ந்து
தெளிவது போல
மனதை தெளிவாக்கணும்

தனிமை ஆகாயம் மாதிரி
மனதை தூய்மையா
பரந்து இருக்க வைக்கணும்

தனிமை கடவுள் மாதிரி
உணர்தல் மூலமாக
நம்மை முழுமையாக்க
உள்ளொளிப் பெருக்கணும்

தனிமை மரம் மாதிரி
கிளைகளை அசைத்து
பேசுவது போல
நம்மை நாமே
சுயமாய் சோதிக்கணும்

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

மழை
பொதுவானது
நமக்கு வேண்டுமானால்
குடைகள்
பிடித்துக் கொள்ளலாம்

பின்பற்றா விட்டாலும்
ஏற்றுக்கொள்ளா விட்டாலும்
பிறர் பேச்சை
செவிமடுக்கும் பொறுமை
தியானத்திலும்
மேலானது



இரவின்
ஒரு துகளை
வெளிச்சமாக்கிக்
கொண்டிருக்கிறது
மின்மினிப் பூச்சி

தோட்டத்தை
அழகாக்குவதைத்
தவிர
வேறுஒன்றும் தெரிவதில்லை
பட்டாம்பூச்சிகளுக்கு

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# அவளற்ற நான்

நலமின்றி நாளெல்லாம்
நான் என்னில் இன்றி
நினைவுகளால் நித்தம்
நீயாகவே நிற்கிறேன்

நுரை தள்ளும் அலையாய்
நூலறுந்த வான் பட்டமாய்
நெடுநல்வாடை தேவியாய்
நேர்ந்ததடி நிலை பாவியாய்

நைந்த நூலாய் பறக்கிறேன்
நொடிகளும் யுகங்களாய்
நோகிப்போக-எனை விட்டு
நௌவியாய் மறைந்தவளே



கவிஞர் ஆனந்த் குவை. ஜெயராமன், சேத்தியாத்தோப்பு

# நாமும் கூட குழந்தைகளே

கோடை விடுமுறையில்
கொண்டாட்டமாய் சுத்தி சுத்தி
பட்டாம்பூச்சியாய் பறந்து பறந்து
கவலைகள் மறந்த சின்னஞ்சிறு பூக்களாம்.

மழலை செல்வங்களுக்கு
பள்ளியும் திறந்தாச்சு
சுதந்திரமும் போயாச்சு
நாளும் எந்திரமாய் பரபரப்பாய் ஓடுது
பள்ளிக்கும் வீட்டுக்கும் சடுகுடு நடக்குது.



பொழுது விடிஞ்சாலே வேம்பா கசக்குது
நாளைய உலகத்தின்
தலைவர்களே குழந்தைகள்
எதிர்கால இந்தியாவின் நம்பிக்கையே
குழந்தைகள்தான்.

இன்றைய குழந்தைகளின்
குறும்புகள் எல்லாமே
சொல்லியே மாலாது
அவர்களின் உலகத்தில் நாமும் கூட
குழந்தைகளே!

கவிஞர் ஜேப்பி@பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# களவு போன இதயங்கள்



மெல்ல புலர்ந்தன விடியல் பொழுது
துயில் கலைந்தாள் அவள்
முகமதை புதைத்தாள் ஜன்னல் ஓரம்

இருவிழிகளிலும் ரசனை
ததும்பி வழிகிறது
பறவைகளின் இசைத்தூறலோடு
மேனித்தழுவும் தென்றல் அவளின்
கார்கூந்தலை கலைத்து போகுது

மைவிழியாளோ தேடுகிறாளே
தன்னவனை மனதுக்குள்
மறுகி தவிக்கிறாள்
பூங்காற்றை தூது விட்டாளே
தன் மனங்கவர்ந்தவனை தேட

அலைபாயுதே விழிகளிரண்டும்
களவாடி போனானே என் இதயமதை
மனதை மயக்கும்
மாயவித்தைக்காரானோ அவன்

தேடியழையும் விழிகளிலோ
வெறுமை குடிகொண்டதே
சுற்றம் மறந்தாளே கன்னியவள்
துயரம் கொண்டாள் மனதிற்குள்

ததும்பி வழியுதே விழிக்குள்
நீர்படலமது சிதறலாய்
அவனின் பிம்பமது துளிகளின்
நடுவே மின்னி மறையிது

துளிர்க்கிறாளே தளிரெனவள்
திருடியதை திருப்பிக்கொடு என
வழக்காடுதே அவளின் மௌனம்
மௌனச்சிரிப்பில் யாசிக்கிறானே
அவளின் கள்வனும் காதலாய்

களவு போன இதயங்களோ
இடம் மாறிக்கொண்டது
கச்சிதமாய்.

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# அப்பாவின் அன்பு மகள்

அகிலமே அன்பை
அம்மா என்றாலும்
மகளின் உலகமே
அப்பாதான்!

அகிலத்தினிலே
அனைத்து மாதருக்கும் - தன்
முதல் ஆசான்
முதல் நண்பன்
முதல் காதலன்
முதல் கதாநாயகன்
தந்தைதான்




அருகில் இருந்த
அன்பை பிரிந்த பின்
திருமதியான பின்
நித்தமும் நினையாமல்
நான் இல்லை

உன் அதட்டல் கூட
என்னை
ஆற்றுப்படுத்தியுள்ளது

என்
நல்லொழுக்கம்
நன்மதிப்பு
பாராட்டு
அனைத்தும்
உங்களுக்கு நான்
சூட்டும் கிரீடம்.

கவிஞர் திருமதி மோகன், நாவலப்பிட்டி (இலங்கை)

# அப்பா

அனைவருக்கும் (நமக்கு) உயிர் அளித்த உத்தமரே
அனைத்து ஆதங்கத்தை அடக்கி ஆள்பவரே
அன்பையுமே அளவாக பயன்படுத்தும் அன்பாளரே
அனுதினமும் குடும்பத்திற்காக உழைப்பவரே
அவர் அன்னை-பிதாவை அரவணைத்தே - என்
அன்னையையும் அரவணைப்பவரே
ஆசை ஆட்டம் கண்டது அவருக்கு
இனிய இல்லத்திற்க்கு ஈடுஇணை யேது இவருக்கு
ஆணவம் ஆதிக்கமற்றது அவருக்கு
இல்ல இன்பத்திற்கு ஈடுஇணை யேது இவருக்கு
ஆறுதலுக்கு அதிகம் ஓடி வருவது அவரே
இதமாக ஈகையுடன் பேசுபவரே
உடல் உழைப்பை எங்கள் வளர்ச்சிக்கு வழங்கியவரே
உறவினர் - ஊரார் போற்ற வாழ்ந்தவரே
உயர்ந்த உள்ளம் உடையவரே
உயர்வுக்காக ஊக்கபடுத்துபவரே
உதவும் உள்ளம் உடையவரே
உத்தமனகா ஊர்போற்றவே வாழ்ந்தவரே
ஊக்கமாக ஊழ்வினை நீக்கி வாழ்ந்தவரே
எங்கள் ஏற்றம் கணடு மகிழ்ந்தவரே
ஊர் ஊராக சுற்றி உழைத்து உயர்ந்தவரே
எங்கும் ஏற்றம் பெற திறம்பட உழைத்தவரே
ஊரே ஊக்கமடைந்திட உழைத்தவரே
எல்லோரும் ஏகந்தமாக வாழ வைத்தவரே
ஏர் பிடிக்க ஏற்றம் இறைக்க போதித்தவரே
ஏனோ ஐந்தெழுத்து படிக்காத மேதையே
ஏகபோக ஏகந்தமாக வாழந்தவரே
ஏனென்ற ஐய்யமின்றி வாழ்ந்தவரே
ஏடெடுத்து ஏற்றம் பெற வளர்த்தவரே
ஏக்கம் ஐக்கியம் கொள்ளா வண்ணம் வளர்ந்தவரே
ஒவ்வொருவரையும் ஒற்றுமையாக வளர்தவரே!
ஓரமாக செல்லவும் ஔவையாரின் சொல்லையும் போதித்தவரே
ஒழுங்குடனே ஒத்தாசையாக வளர்தவரே!
ஓடையில் குளித்து ஔடதம் நீக்கி வாழ்ந்தவரே
ஒவ்வொருவரையுமே ஔதாரியமாக வளர்தவரே
ஓராங்குடனே ஔத்தாலகம் போல வளர்தவரே



வார்த்தை - பொருள்
ஔதாரியமாக - பெருதன்மையாக
ஓராங்கு - ஒன்றுபோல் ஒருசேர
ஔத்தாலகம் -தேனீ

கவிஞர் மு. கவிபாலன் (எ) மு. சோமசுந்தரம், சிதம்பரம்

# துயரிலும் துளிர் விடு

சோம்பலையும் சோகங்களையும் ஒதுக்கிடு
நீயும் சோதனையை சாதனையாக்கிடு
ஓய்வு என்பதை மறந்திடு
ஓடி உழைப்பதை நிதம் நீ உணர்ந்திடு

கையூட்டை துறந்திடு
கோபுர கலசமாய் நிதம் நீ மின்னிடு
கலகங்கள் மறந்திடு
கரும்பின் சுவையாய் பிறருக்காக வாழ்ந்திடு

துயரினில் துவளாதே
துளிர் விட்டெழுந்து விருட்சமாய் வளர்ந்திடு
முயற்சி பயிற்சி தன்னம்பிக்கை கொண்டு
செயல்களில் வெற்றிக்கனி சுவைத்திடு



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

ஒன்றுமில்லை
என்ற ஒற்றை வார்த்தைக்குள்
மறைக்க முடிகிறது எத்தனையோ
வலிகளை.



என்
உள்ளம்
ஈரமாக இருக்கிறது
கொஞ்சம் பாரமாகவும்
இருக்கிறது ஆதலால் நான்
தூரமாக இருக்கிறேன் உங்களை
விட்டு.

ஒவ்வொன்றிலும்
பிழைகளைக் காண்கிறோம்
ஆனால் நாம் அந்த பிழையில் உள்ள
தத்துவத்தை காண மறந்தே போகிறோம்.

கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# நற்பொழுதாய் விடியாதோ?

ஆயிரங்கால் மண்டபத்தில்
அமர்ந்தேனே தனியாக!

நற்கணவன் தன்னோடு
நான்வந்த நாட்களையே

கற்றூண்கள் நன்கறியும்!
இன்றவர் இங்கிலையே!

நிற்கதியாய் நிற்கின்றேன்!
நித்தமும் வருந்துகிறேன்!

கற்றூண்கள் இடையிடையே
காண்கின்றேன் ஒளிக்கீற்றை!

நற்பொழுதாய் விடியாதோ?
நன்மைகள் பிறக்காதோ?

பெற்றெடுத்த பிள்ளைக்கு
நல்லறிவு தோன்றாதோ?

நற்றூணாய் எனைத்தாங்க
விழைந்தோடி வாரானோ?



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

## என்ன செய்ய?

முந்தைய நிகழ்வுகளை வைத்தும்
அதன் விளைவாய் ஏற்பட்ட
அபிப்பிராயம் வைத்தும்

தற்போது பேசிக்கொண்டிருக்கின்ற
விஷயம் பற்றி விளக்கவோ
உண்மைநிலை கூறவோ
முற்படுகையில் 'தேவையில்லை'
'என்ன சொல்லப்போகிறாய்
என்று தெரியும்'
என்று பதில் சொன்னால்
என்ன செய்ய?
****

## அதற்கும்



உடல் நலமின்மையில்
மருத்துவரின் என்ன பண்றது
சொல்லுங்கள் என்பதற்கும்
சாருக்கு என்ன ஆச்சு
என்பதற்கும்

மனதின் கஷ்டத்தில் முகவாட்டத்தில்
நமக்கானவர்களின்
என்னன்னு சொன்னாதானே தெரியும்
என்பதற்கும்
ஏம்பா இப்படி இருக்கே
என்பதற்கும்

தோல்வியில் நமக்கானவர்கள்
உதிர்க்கும்
அடுத்த தடவையாவது
சரியாய் செய் என்பதற்கும்
இது சின்ன சறுக்கல்தான்
அடுத்தமுறை சரியாய்
விடும் என்பதற்கும்

வெற்றி பகிர்தலில்
சரி அடுத்தது ஆரம்பி
என்பதற்கும்
உனக்கான
உழைப்பு, திறமைக்கும்
அங்கீகாரம் என்பதற்கும்
உள்ள வித்தியாசம்
மனம் ஒட்டலும்
புரிந்துகொள்ளலும்

கவிஞர் சந்திரராஜன், மானாமதுரை

# பாலகுமார் கவிதை

மஞ்சள்மேனி அழகுக்காரி நீதானடி.
மாசில்லா மனசுக்காரி உன்னைத் தேடினேன்
மாந்தோப்புக்குள் போகலாமடி சுவைப்பட
பேசாலமடி மான்விழியாளே சம்மதம் சொல்வாயடி
உன்னோடு கொஞ்சிப்பேசிட ஆசையாக இருக்குதடி
மல்லிகைச்சரமும் தித்திப்பும் கொண்டு வருவேனடி
காதில் இரகசியம் சொல்வாயாப் பைங்கிளியே
நெஞ்சமும் படபடக்குதடி அருகினில் வருவாயடி
கருங்கூந்தல் பாதம்வரையில் நீளுதடி
கோதிப்பின்னலிட நானும் காத்திருக்கேனடி
காளை நான் சொல்லறத்தைக் கேளடிநீயுமே
கைகண்ணாடி வளையல்ஓசை கேட்கணுமடி
கல்யாணத்தேதி உன்னிடத்தில் சொல்வேனடி
அழகான பெரிய பந்தலொண்ணுப் போடுவேனடி
உன்னைத் தாரமாக்கி இல்லறம் நுழைவேனடி
நல்வாழ்வுத்தந்து சொத்துக்கள் தருவேனடி



கவிஞர் இரா. சீ. பாலகுமார்

# பஞ்சதன்



தூங்கலாம் என்றுதான் படுத்தேன்
இறப்பேன் என்றறிந்திருந்தால்
நேராக அங்கே படுத்திருப்பேன்
***

மதில் மேல்
பூனை !
குழம்பியதாக தெரியவில்லை
***

அ அன்பு
ஆ ஆப்பு
ம் படியுங்கள் மறுபடியும்
***

கோபம் என்ற வார்த்தைக்குள்
உரிமையை அடைத்து
நியாயப்படுத்துகின்றனர்
***

ஊற்றெடுக்கும் கண்ணீர்
உரித்தானவர்களை
பார்க்கையில்
***

நான் அழுத போது
சிரித்தவர்கள் கடைசிவரை சிரிக்கட்டும்
இனி நான் அழ போவதில்லை
***

கைக்குழந்தையின் குட்டி படுக்கை தலையணை
விளையாட்டு பொருட்கள் ஆடைகள்
எல்லாம் தனி உலகம் போல் தோற்றமளிக்கிறது
***

உனக்கு உதவி செய்ய யாருமில்லை
என்றுணர்ந்த நீ
பிறருக்கு உதவாமல் இருப்பது நியாயமல்ல
***

மௌனம்
மரியாதையற்றது
சில நேரங்களில்
***

கேள்வி கேட்டால்
எதற்கிந்த கேள்வியாம் !
புத்திசாலித்தனம்
வரைமுறை இல்லாமல்
வளர்ந்துவிட்டது
***

பெவி குவிக் பெண்கள்
நன்றாக ஒட்டிக்கொண்டு
இரத்தமும் சதையுமாய்
பிய்த்துகொண்டு போவார்கள்

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

# நீ நீயாக இரு

எல்லாவற்றிற்கும் மேலாய் உன்னை படைத்தவனை நேசி
பின்னர் உன்னை பற்றி யோசி
உன்னால் நீயே நேசிக்கப்படுவாய்.

நீ பிறர் மனதை கௌரவப்படுத்தினால்
உன் மனம் தானாய் கண்ணியம் பெறும்.

நீ பிறருடன் இனிமையாய்ப் பேசினால்
தனிமை உன்னை ஒரு போதும் சிறை பிடிக்காது.

நீ உன் மனதிற்கு எப்பொழுதும் எஜமானனாய் இரு.
இல்லையேல் அது உன்னை அடிமையாக்கி விடும்.

எப்பொழுதும் புன்னகை மலர்ந்த முகத்துடன் இரு.
புன்னகை உன் எதிரியையும் நண்பனாக்கும்.

நீ அடிக்கடி கோபமடையாதே கோபமடையும்
ஒவ்வொரு நொடியும் உன் எதிரிக்குத் தான் லாபம்.



உனது வாலிபம் வழி தவறாமல் பார்த்துக்கொள்
ஏனென்றால் உனது இதயம் துருப்பிடிப்பதும்
தூசு தட்டப்படுவதும் இந்தப் பருவத்தில்தான்.

நீ ஒருபோதும் மற்றவர்களைப் போல் நானும்
வாழ வேண்டுமென்று நினைத்திடாதே.

நீ உனக்கு கிடைத்த வாழ்வை போதும் என்ற
மனதோடு பொறுந்திக்கொண்டு வாழ்ந்திடு.

நீ எப்பொழுதும் நீயாகவே இரு.

கவிஞர் நபீல் இப்னு இஸ்மாயில், நமடகஹவத்த கலேவெல



திலக்கும், அரசும் தன் உடைமையோடு காந்திவிலி ரயில் நிலையம் வந்த போது, சர்ச்கேட் போகும் ரயில் வந்து சேர, இருவரும் அடித்துப் பிடித்து ஏறிக் கொண்டனர்.. உள்ளே வந்த போது "ஒழுங்காக என் காரிலேயே போயிருக்கலாம்" என்றான் திலக்.

"பரவாயில்லை. ரயிலில் சீக்கிரம் போய் சேர்ந்து விடலாம். இப்போது... என்ன தாதர் மாறி கப்போலி ரயில் பிடித்தால் இரண்டு மணி நேரத்திற்குள் கப்போலி போய் விடலாம். அங்கிருந்து உங்கள் தங்கை பூனம் நடத்தும் தொழிற்சாலைக்கு எவ்வளவு தூரம்?" மற்ற பயணிகளுக்கு வழி விட்டவாறு கேட்டான் அரசு.

"ஒரு மணி நேர பயணம். பூனம் கார் அனுப்புவாள். இல்லை என்றால் போன் பண்ணிக் கேட்டு விட்டு நாம் ஒரு டாக்சி வைத்துப் போய் விடலாம்." "வீணாக எதற்கு? பஸ் கிடையாதா?" என்று கேட்ட அரசுவிடம் "என்ன காரிலே போய் சலித்து விட்டதா?" என்று கேட்டான்.

"அப்படி ஒரு வித்தியாசமான அனுபவத்திற்கு மட்டுமல்லாமல் இனி கார், டாக்சி என்று எடுத்தவுடனே செலவுகள் முடியாதோ?"



"அது நீங்கள் நினைக்கிற அவசர உலகத்தில் ஒத்து வராது என்று நினைக்கிறேன். வாருங்கள். கார் வந்து நிற்கிறது. " என்றவாறு கப்பொலி இரயில் நிலையத்திற்கு வெளியே நின்ற காரில் ஏறினார்கள்

அலுவலகம் வந்த பிறகு உள்ளே வந்தனர்.

தொடரும்...

கவிஞர் இரஜகை நிலவன்

# பாவலரேறு பெருஞ்சித்திரனார்

## கட்டுரை

**அன்னை மொழியே! அழகார்ந்த !**
**கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாசெந்தமிழே!**
**முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியேட்டிடையில்**
**மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!**

-பாவலரேறு



பாவலரேறு பெருஞ்சித்திரனார்(மார்ச் 10, 1933 — சூன் 11, 1995) இருபதாம் நூற்றாண்டின் தமிழ்ப் பல்துறை அறிஞர்களில் முதன்மையான ஒருவர்.

### கல்வி:

பெருஞ்சித்திரனார் பள்ளியில் பயிலும் காலத்தில் தமிழ் ஈடுபாட்டுடன் கற்றவர். "குழந்தை' என்னும் பெயரில் கையெழுத்து ஏட்டைத் தொடங்கி மாணவர் பருவத்தில் நடத்தியவர். பின்பு அருணமணி என்னும் புனைபெயரில் "மலர்க்காடு' என்னும் கையெழுத்து ஏட்டினை நடத்தினார். மல்லிகை, பூக்காரி என்னும் பாவியங்களைப் பள்ளிப்பருவத்தில் இயற்றிய பெருமைக்குரியவர்.

பெருஞ்சித்திரனார் 1950இல்பள்ளிப்படிப்பை நிறைவு செய்த பின்னர், சேலம் நகராட்சிக் கல்லூரியில் பயின்றார். பாவாணர் அங்குப் பணிபுரிந்தபொழுது அவர்தம் மாணவராக தமிழறிவு பெற்றார். இளமையில் பெருஞ்சித்திரனாருக்கு உலக ஊழியனார், காமாட்சி குமாரசாமி முதலானவர்களும் ஆசிரியர்பெருமக்களாக விளங்கினர்.

பெருஞ்சித்திரனார் கல்லூரியில் பயிலும் போது கமலம் என்னும் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். அப்பெண்ணே தாமரை அம்மையாராக இன்று மதிக்கப்படுபவர்.

### தென்மொழி இதழும் எழுத்துப் பணியும்:

பெருஞ்சித்திரனார் புதுவையில் அஞ்சல் துறையில் முதன்முதலில் பணியில் இணைந்தார். ஐந்து ஆண்டுகள் புதுவையில் வாழ்க்கை அமைந்தது. அக்காலத்தில் பாவேந்தருடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. 1959 இல் பெருஞ்சித்திரனாருக்குப் பணிமாற்றல் கிடைத்து கடலூருக்கு மாற்றப்பட்டார். இச்சூழலில் பாவாணர் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்அகரமுதலித் துறையில் பணியேற்றார். பாவாணர் விருப்பப்படி தென்மொழி என்னும் இதழை1959இல் பெருஞ்சித்திரனார் தொடங்கி நடத்தினார். அரசுப் பணியில் இருந்ததால் தன் இயற்பெயரான துரை-மாணிக்கம் என்பதை விடுத்து பெருஞ்சித்திரன் என்னும் புனைப்பெயரில் எழுதினார்.

தமிழ்ப்பற்றும் தமிழ் உணர்வும் கொண்டு தம் பாட்டு ஆற்றலால் இதழை நடத்திய பெருஞ்சித்திரனார் அக்காலத்தில் சுடர் விட்டு எழுந்த இந்தி எதிர்ப்புப் போரில் தம் உரையாலும் பாட்டாலும் பெரும் பங்காற்றினார். இந்தி எதிர்ப்புப் போரில் இவர்தம் தென்மொழி இதழிற்குப் பெரும் பங்குண்டு.

### தமிழ்த்தேசிய விடுதலைப் போராளி:

"விடுதலை வேண்டும் முதல் வேலை
எந்த வேலையும் செய்யலாம் நாளை"...

-மேற்படி பாடலில் பெருஞ்சித்திரனார் வேண்டிப் பாடிய விடுதலை என்பது தமிழ்நாடு விடுதலையைக் குறிப்பதாகும்.

1956ஆம் ஆண்டு மொழிவழித் தமிழகம் அமைந்த பிறகும் தனிக் கழகம் கண்ட அண்ணா திராவிடநாடு கோரிக்கையை கைவிடத் தயாரில்லை. இந்நிலையில் 1959ஆம் ஆண்டு தமிழ்மொழி முன்னேற்றம், இன முன்னேற்றம், தமிழ்நாடு விடுதலை ஆகிய மூன்று கொள்கையை முன் வைத்து தென்மொழி இதழை பெருஞ்சித்திரனார் தொடங்கினார்.

கவிஞர் திரு.குமர.தர்மசீலன், இதழாசிரியர்

## மறைமலையடிகள் வழியில் பெருஞ்சித்திரனார் :

தனித்தமிழியக்கத் தந்தை மறைமலையடிகள் வழியில் தேவநேயப் பாவாணர் தென்மொழி இதழில் சிறப்பாசிரியராகச் செயல்பட்டார். 1963 ஆம் ஆண்டு பிரிவினை தடைச் சட்டம் வந்த போது அண்ணா பயங்கொண்டு திராவிட நாடு கோரிக்கைக்கு முழுக்கு போட்டார். இவரோ ஆட்சியாளருக்கு அடங்கிட மறுத்தார்.

## பெரியாரும் பெருஞ்சித்திரனாரும்:

ஈ.வெ.ரா.பெரியாரை ஆரிய எதிர்ப்பின் அடையாளமாக போற்றி வந்தவர் பெருஞ்சித்திரனார். 1965ஆம் ஆண்டு மொழிப்போரின் போது பெரியார் மீது கடும் சினம் கொண்டார். காமராசர் அவர்கள் நல்லவர் என்று கூறி, பேராயக்கட்சிக்கு சார்பாக பேசியதோடு, தி.மு.க. இந்தியை எதிர்க்கிறது என்பதற்காக இந்தியைப் படிப்பதில் தவறில்லை என்று பெரியார் பேசியதைக் கண்டித்து "பெரியார் செய்த பெரும்பிழை" என்று தென்மொழியில் எழுதினார்.

பெரியாரின் தமிழ் மொழி எதிர்ப்பை கடுமையாகச் சாடி "பெரியாரின் தமிழ் ஆராய்ச்சி" என்று தலைப்பிட்டு அதே தென்மொழியில் விரிவான கட்டுரை தீட்டினார். அதில், "மொழித்துறையில் இவர் வெறும் இராமசாமி தான்" என்று சாடினார். பெரியாரோ தன்னை திருத்திக் கொள்ள வில்லை. மீண்டும் மீண்டும் "தமிழ் ஒரு காட்டுமிராண்டி மொழி" என்று பெரியார் எழுதிய போது வெகுண்டெழுந்து 'தமிழ் ஒரு காட்டு மிராண்டி மொழியே' என்று 16 பக்கம் பெரியாரை கடிந்து எழுதவும் துணிந்தார்

## கருணாநிதியும் பெருஞ்சித்திரநாரும்:

தமிழின இரண்டகர் கருணாநிதி தென்மொழி ஏட்டை தடை செய்த போது பெருஞ்சித்திரனார் தமிழ்சிட்டு ஏட்டை தொடங்கி கொள்கை முழக்கம் செய்தார்.

கவிஞர் திரு.குமர.தர்மசீலன், இதழாசிரியர்

1976இல் ஆரியப்பித்து கொண்ட பெண் இந்திரா காந்தியால் மிசா சட்டத்தில் ஓராண்டு தளைப்படுத்தப்பட்டார். 1983ஆம் ஆண்டு ஈழ விடுதலைப் போர் தீவிரமடைந்த போது அதற்குத் துணை நின்றார். 1991 இல் இராசீவ் காந்தியை கொன்ற வீரத்தமிழ்பெண் தணுவை பாராட்டி "ஆகுமோ உலகு அவள் அழிவிலாப் புகழ்க்கே" எனும் பாடலை தென்மொழியில் எழுதினார். மேலும் பல நிகழ்வுகளில் தணுவைப் பாராட்டிப் பேசியதால் 15 நாட்களுக்கு மேல் சிறை ஏகினார். 27.1.1993 இல் தமிழீழ விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசியதால் ஆரிய செயலலிதா அரசு கொடிய தடா சட்டத்தில் கைது செய்தது. நான்குமாதம் சிறைவாசம் கழித்த பின்னரே வெளியே வந்தார்.

## இறுதி போராட்டம்:

1994இல் 'திராவிடர்' என்று சொல்வது தவறு என்றும், 'தமிழர்' என்றே குறிப்பிட வேண்டுமென்றும் தனது 'தமிழ் நிலம்' ஏட்டில் அறிக்கை விடுத்தார். தாழ்த்தப்பட்டோரை 'பழந்தமிழர்' என்றே குறிப்பிட வேண்டும். ஆதிதிராவிடர் என்றோ, ஹரிஜன் என்றோ, தலித் என்றோ அழைக்கக் கூடாது என்பதையும் தெளிவாகக் கூறி விளக்கமளித்தார்.

கடும் காய்ச்சல் கண்டு துன்ப நிலையில் இருந்த போதும் 24.4.95இல் நடந்த தமிழே பயிற்றுமொழி, ஆட்சிமொழி என்று கூறி தலைநகர் தமிழ்க்கழகம் நடத்திய பேரணியில் கலந்து கொண்டு குடும்பத்தோடு தளைப்படுத்தப்பட்டார். அதுவே பெருஞ்சித்திரனார் இறுதியாகப் பங்கேற்றப் போராட்டமாகும்.

## மறைவு:

சளித்தொல்லை மிகுந்து, சிறுநீரகம் செயலிழப்புக்குள்ளான நிலையில் 11.6.1995 இல் இத்தமிழ்ப் பேருலகத்தை கண்ணீர் கடலில் மிதக்க விட்டு மறைந்தார்.

கவிஞர் திரு.குமர.தர்மசீலன், இதழாசிரியர்

நாளை நமதே

# கடந்து சென்றவை அனைத்தும்

# பாதைகள் அல்ல

# நாம் கற்றுக்கொண்ட

# பாடங்கள்

அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு
அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு
சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com